2010 ஏப்ரல் 19]

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.*

திரு. வே. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்த நீதிமன்ற வளாகம், பௌத்தர்கள் தங்கி வழிபட்ட இடம். பிறகு, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நீதிமன்றமாக மாற்றப்பட்டது. தற்போதுகூட நீதிமன்ற விரிவாக்கத்திற்காக அஸ்திவாரம் போடுகிறபோது கீழே பாதாள் அறைகள் எல்லாம் இருப்பதாக தொல்லியல் துறை அதிகாரிகள் பல முறை வந்து ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். எனவே, தற்போது நீதிமன்ற வளாகம் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்த இடம் தொல்லியல் துறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய இடமாகவும் இருக்கின்ற காரணத்தினாலே முன்னுரிமை அளித்து ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துத் தருவார்களா என்று மீண்டும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடம் தொல்லியல் துறைக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தும் உயர் நீதிமன்றத்திற்குத் தனிப்பட்ட வகையிலே தெரிவிக்கப்படும். பிறகு அவர்களுடைய அறிவுரையின்படி அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***102932—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

[2010 ஏப்ரல் 19

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே, தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் கருத்துரு இல்லை என்று கூறினார்கள். அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். திருப்பூர் மாவட்டமானது புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். உடுமலை வட்டமும், மடத்துக்குளம் வட்டமும் புதிதாக உருவாக்கப்பட்டவை. அங்கே அதிகமான மாணவ, மாணவிகள், கல்லூரியிலே படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஏழையெளிய மாணவர்கள்தான் அங்கே படித்து வருகிறார்கள். இதைக் கருத்திலே எடுத்துக்கொண்டு, அரசானது இப்பொழுது புதிதாக மத்திய அரசு நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஏதாவது ஒன்றை அந்தப் பகுதிக்கு கண்டிப்பாக உருவாக்கித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து திருப்பூர் மாவட்டம் பிரிக்கப்பட்டபோதிலும்கூட கல்வியைப் பொறுத்த அளவில், அந்த மாவட்டங்கள் வளர்ச்சி பெற்ற மாவட்டங்களாகவே திகழ்ந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக தமிழகத்தில் 22 அரசுப் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும் 34 அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில், கோயம்புத்தூரில் மட்டும் அரசுத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இரண்டும், அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரிகள் மூன்றும் இருக்கின்றன. உறுப்பினர் குறிப்பிடுகிற திருப்பூர் மாவட்டத்தில், 5*

2010 ஏப்ரல் 19]

தனியார் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த 5 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளிலேயே சென்ற ஆண்டு மட்டும் ஏறத்தாழ 435 இடங்கள் காலியாகவே இருந்திருக்கின்றன. ஆகவே, படிக்கிற மாணவர்களுக்குத் தனியார் கல்லூரிகளிலே இட வசதி அந்தப் பகுதிகளிலே கிடைத்துக் கொண்டிருக்கிறது. மற்றப் பகுதிகளிலே, கிடைக்காத இடங்களிலே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளிலே தனியார் அரசுக் கல்லூரிகள் இல்லையோ அந்தந்தப் பகுதிகளுக்கு உடனடியாக கல்லூரிகளைத் தொடங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். மத்திய அரசே தயார் செய்து, இங்கேயிருக்கிற பின்தங்கிய பகுதிகளிலே அவற்றைத் தொடங்கலாம் என்று சொல்லி, 7 மாவட்டங்களை பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்காகவும், 27 இடங்களை அரசுக் கலைக் கல்லூரிகளுக்காகவும் மத்திய அரசாங்கமே அறிவித்திருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்தத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க முடியவில்லையென்றாலும்கூட, Polytechnic போன்ற கல்லூரியையாவது அந்தப் பகுதியிலே அமைப்பதற்கு அரசுக் கலைக் கல்லூரியிலே 60 ஏக்கர் நிலம் இருக்கிறது; அங்கே போதிய இட வசதி உள்ளது; அந்த இடத்திலே அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு அங்குள்ள கலைக் கல்லூரியானது 2,300 மாணவர்கள் படிக்கக்கூடிய கல்லூரியாக இருந்துகொண்டிருக்கிறது. அங்கே மேல்நிலை பட்டப் படிப்பில் சில வகுப்புகள் நடத்தப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. அதிலே M.Sc. (Computer Science), அதேபோல M.Sc. (Statistics), M.A. (English), M.A. (Economics), M.Sc. (Maths) போன்ற புதிய வகுப்புகளையாவது துவக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். அந்தப் பகுதியிலே புதிய கட்டடங்கள் இப்போது கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் அங்கே கட்டடங்கள் தேவைப்படுகின்றன. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு, அங்கே கட்டடங்கள் கட்டித் தருவதற்கும், அந்த மாணவர்களுடைய வசதியைக் கருத்திலே கொண்டு, அங்கே Auditorium வசதியும் இல்லாத ஒரு சூழ்நிலை உள்ளது. அதையும் அமைத்துத் தருவார்களா என்பதை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகவேலு, தொழில்நுட்பக் கல்லூரி என்று கேட்டுவிட்டு, என்னவெல்லாமோ கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-50

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வியே பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான கட்டடம் பற்றியது. Polytechnic கல்லூரிகளைத்தான் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் என்று சொல்கிறோம். குறிப்பாக, தலைவர் கலைஞர் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், இந்த ஐந்தாண்டுகளில் 67 அரசுக் கலைக் கல்லூரிகளுக்கும் பல்வேறு கட்டடங்கள் கட்டுவதற்காக மட்டும் ஏறத்தாழ 50 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கி, இன்று பல கல்லூரிகளிலும் அவை உருவாக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் வைத்திருக்கிற கோரிக்கையைப்போல, அந்தக் கல்லூரிகளிலேயிருந்து, பல்கலைக்கழகத்திற்கு P.G. பட்ட மேற்படிப்பிற்கான கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டிருக்குமானால், அவற்றை நிச்சயமாகப் பரிசீலித்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

54—

ஒலி எழுப்பி

***110263—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகன ஓட்டுநர்கள் பேரிரைச்சலை ஏற்படுத்துகிற ஒலி எழுப்பிகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா?

TRUTH ALONE TRIUMPHS